அக்டோபர் மாதச் சிந்தனைகள்

SIGNUM FIDEI



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை

2022



PUBLISHED BY

COMMUNICATION COMMISSION

DE LA SALLE BROTHERS -INDIA

தெலசால் அருட்சகோதரர்கள்
இந்திய மறைப்பணித்தளம்

## சிந்தனை தொகுப்பாளர் உரை

அன்பு நெஞ்சங்களே! நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அன்றாட இறைவார்த்தைப் பகுதிகள் நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் ஆன்மீக, சமூக சிந்தனையினை, கொடுப்பதுடன் அவை எவ்வாறு நம்முடைய ஆசிரியர் பணி அல்லது கல்விப்பணியை முழுமனதுடன் செய்யத் தூண்டுகிறது என்பதனை மையப்படுத்தி ‘ இறைவார்த்தையோடு லசாலிய சிந்தனை’ அக்டோபர் மாத பிரதி அமைந்துள்ளது. வாசிப்போம்! சிந்திப்போம்! பகிர்வோம்! பயன்பெறுவோம்.

அருட்சகோ. **பிரினேஷ்** FSC




லசாலிய அழைப்பு
என்பது வகுப்பறையே
ஆலயமாக,
மேஜையே பலிப்பீடமாக
ஆசிரியரே
பலிப்பொருளாகக்
கொண்டு
இளைஞர்களுக்கு
அறிவையும்,
ஞானத்தையும் அளிக்கும்
ஒரு தியாக வாழ்வு

**லசாலிய இறையழைத்தல்**

**கல்விப் பணிக்கு இறைவன் அழைக்கிறார்**

**வந்து பாருங்கள்**

(யோவான் 1: 39)

தொடர்புக்கு
இறையழைத்தல் இயக்குநர்,
தெலசால் சபை அருட்சகோதரர்கள்,
புனித மிக்கேல் அருள் தென்றல்,
தேனி சாலை, நாகமலை,
மதுரை - 625 019,
தொலைபேசி : 9363518327





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எசாயா 66:10-14

பதிலுரைப்பாடல்
திபா. 131:1-3

நற்செய்தி
மத்தேயு 18:1-5

குழந்தை இயேசுவின் புனித தெரசா

அக்டோபர் 2022
**01**
சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

கடவுள் அனைத்தையும் ஆற்ற வல்லவர். இன்றைய இரண்டு வாசகங்களும் நாம் கடவுளோடும், அவருடைய பிரசன்னத்திலும் இருக்கும்போது நம்மால் பல நல்ல செயல்களையும், அற்புதங்களையும் செய்ய முடியும், கடவுளும் நம்மை மேன்மைப்படுத்துவார் என்பதனை யோபுவின் வாழ்கையிலும், திருத்தூதர்களின் வாழ்க்கையிலும் காண முடிகிறது.

இன்றைய புனிதையான குழந்தை தெரசம்மாள் அவருடைய எளிய முன்மாதிரியான வாழ்க்கையினாலும், கடவுள் மேல் உள்ள அதித நம்பிக்கையினாலும் நமக்கு பணிவு மற்றும் இறை நம்பிக்கை என்ற இரு விழுமியங்களை விட்டுச் சென்றிருக்கிறார்.

புனித தெலசாலின் ஆன்மீக நெறி காட்டுதலின்படி வாழக்கூடிய நாமும், நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளிடம் இறைவனைப்பற்றியும், இறை நம்பிக்கைப் பற்றியும் எடுத்துரைக்கவும், இவைகளை நம்முடைய முன்மாதிரியான வாழ்க்கையால் வாழ்ந்து காட்டவும் இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

**ஜெபம் :**

அன்பு இயேசுவே! நாங்கள் எங்களுடைய பணித்தளங்களில் பணிவினாலும், எளிமையான வாழ்க்கை முறையாலும், எங்களை சார்ந்து இருக்கின்ற மக்களை குறிப்பாக குழந்தைகளை உம்மிடம் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய அருளைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகின்றோம். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

புனித குழந்தை தெரசம்மாள், என் அன்பு சகோதரரே, துன்பங்கள் ஜெபிக்கத் தூண்டுகின்றன. கடவுள் உங்களுக்கு அதை தரும்பேது, அதை ஒரு வரமாக கருதவேண்டும். அப்போது செபிக்க உங்களுக்கு செபபுத்தகம் தேவையில்லை (கடிதம் - 111)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
அபக்கூக்கு 1:2-3,2:2-4

இரண்டாம் வாசகம்
2 திமொ 1:6-8,13-14

நற்செய்தி
லூக்கா 17:5-10

பொதுக்காலம்
27-ம்
ஞாயிறு

அக்டோபர் 2022
**02**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்தக் காட்டு அத்திமரத்தை நோக்கி "நீ வேரோடே பெயர்ந்துபோய்க் கடலில் வேரூன்றி நில்" எனக் கூறினால் அது உங்களுக்கு கீழ்படியும் (லூக் . 17:6)

இன்றைய வாசகங்களின் மூலம் கடவுள் நமக்கு அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார் என்பதை புனித பவுலடியார் நமக்கு நினைவுபடுத்துகிறார். நம் விசுவாசம் கடுகளவே இருந்தாலும், அவ்விசுவாசத்தின் பொருட்டு நாம் கேட்பதை கடவுள் கொடுப்பார். நம்மை வழிநடத்துவார்.

இன்றைய தினம், நம் தாய் திருச்சபை "காவல் தூதர்களை" நினைவு கொள்கிறது. புனித தெலசாலின் தியான முறைகளில் காவல் தூதுவர்களுக்கு (Guardian Angels) சிறப்பான இடம் உண்டு. கத்தோலிக்க பாரம்பரியத்தில், காவல் தூதுவர்கள் எல்லா நிலைகளிலும், நேரங்களிலும் நம்முடன் இருந்து நம்மை வழிநடத்துகிறார்கள் என்பது நம்முடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

ஒவ்வொரு லசாலிய அருட்சகோதரர்களும், ஆசிரியரும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு கண்ணுக்கு புலப்படக்கூடிய காவல் தூதுவர்களாக இருந்து, இவ்வுலகத்திலுள்ள கெட்ட செயல்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கவும், நல்வழியில் அவர்களை அழைத்துச் செல்லவும் வேண்டுமென்று புனித தெலசால் அறிவுறுத்துகிறார்.

**ஜெபம் :**

அரணும், கோட்டையுமான எம் இறைவா! எங்களின் அரவணைப்பில் உள்ள குழந்தைகள் அனைவரையும் நாங்கள் நல்வழியில் நடத்தவும், அவர்களை சமூக சீரழிவில் இருந்து காக்கத் தேவையான ஆற்றலையும், மனப்பாங்கையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

காவல்துதர்கள் பெருவிழா : கடவுள் சிலரை நற்செய்தியின் உண்மையை அறிவிக்க தேர்ந்தெடுப்பதுபோல, உங்களை காவல் தூதர்களின் பணியான குழந்தைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க அவர் அழைத்துள்ளார் (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இறையன்பு, பிறரன்பு இந்த இரண்டும் தான் உலகளாவிய கத்தோலிக்க பேரவையின் இரு கண்கள். அன்றாட வாழ்க்கை எதார்த்தங்களை நம் அறிவாற்றலால் புரிந்து, அவைகளை சிந்திக்கும் போது தான் நம் இதயங்கள் இரக்கச் செயல்கள். செய்ய முற்படுகின்றன. இந்த இரக்கச் செயல்களால்தான் நம் சபையின் நிறுவனர்களைப் பலதரப்பட்ட பணிகளை செய்யத் தூண்டியன.

இன்றைய கால சூழலில் சரியான புரிதல் இல்லாததன் காரணமாக பாதுகாப்பு கொடுக்க வேண்டிய குழந்தைகள், உரிமைகள் சட்டம், பல சமயங்களில் குழந்தைகளை தவறான பாதைக்கு இட்டு செல்கின்றன. அதாவது குழந்தைகள் தவறு செய்யும் போது அதை திருத்த வேண்டிய நிலையில் உள்ள பெற்றோர்களும், ஆசிரியர்களும், தாங்கள் பெற்ற பிள்ளைகளையும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளையும் சரியான வழியில் நடத்தி செல்ல தயங்குகின்றனர். நம் குழந்தைகள் தவறுகள் செய்யும்போது திருத்தவும், கண்டிக்கவும் தயங்கும் போதெல்லாம் நாமும் இன்றைய நற்செய்தியில் தேவையில் உள்ளவருக்கு உதவி செய்ய தயங்குகின்ற குருவையும், லேவியரையும் போலத்தான் செயல்படுகிறோம். நமக்கு அடுத்திருப்பவருக்கு உதவி செய்ய தயங்கும்போது பிறரன்பு மடிகிறது. பிறரன்பு இல்லாத இடத்தில் இறையன்பு எப்படி இருக்க முடியும்? சிந்திப்போம்.

**ஜெபம் :**

என்றும் மாறாத தெய்வமே! தேவையில் உள்ளோர்க்கு உதவி செய்ய மனமிருந்தும், அந்த உதவியால் நமக்கு வருகின்ற இடையூறுகளை கண்டு நாங்களும் பல நேரங்களில் சுயநலவாதிகளாக மாறுகிறோம். உதவி செய்வதில் வருகின்ற துன்பங்களை கண்டு துவண்டு விடாமல், உதவி செய்வதில் கிடைக்கும் மனநிறைவை கண்டு பிறருக்கு உதவ வேண்டிய மனதையும், மனத்திடத்தையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்

முதல் வாசகம்
கலாத்தியர் 1:6-12

பதிலுரைப்பாடல்
திபா. 111:1-2,7-10

நற்செய்தி
லூக்கா 10:25-37

புனித
அடல்கோட்

அக்டோபர் 2022
**03**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

### தெலசாலின் பொன்மொழி

இயேசு உங்களில் இருக்கும்போது, அவர் அப்பங்களில் உள்ளாரா? அவரை உங்கள் ஆன்மாவுடன் தொடர்புகொள்ள அனுமதிக்கிறீர்களா? அவர் உங்களில் இருக்கிறார் என்றால் வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் என்று நீங்கள் கூறமுடியுமா? (MSF)



COMMUNICATION COMMISSION
DE-LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
கலாத்தியர் 1:13-24

பதிலுரைப்பாடல்
திபா. 139:1-3,13-15

நற்செய்தி
லூக்கா 10:38-42

அரிசி நகர்ப் புனித பிரான்சிஸ்

அக்டோபர் 2022

**04**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

இன்றைய புனிதர் பிரான்சிஸ் அசிசியார் படைப்புகள் அனைத்தையுமே சகோதர சகோதரிகள் என்று அழைத்தார். 12ம் நூற்றாண்டிலே சகோதரத்துவத்தை உலகிற்கு அறிமுக படுத்தியவர். இப்புனிதருடைய திருநாள், கத்தோலிக்க துறவிகளால் சகோதரத்துவ நாளாக கொண்டாடப்படுகிறது.

இன்றைய வாசகங்களுக்கும், இன்றைய புனிதருக்கு இடையே ஒரு தனிப்பட்ட சிறப்பை காண முடிகிறது. புனித பவுலடியாரும், புனித பிரான்சிஸ் அசிசியாரும் மாபெரும் படைவீரர்களாக மாறவேண்டுமே என்று ஆசைப்பட்டவர்கள். இவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் எதிர்கொள்ளல் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டிருந்தது. இவர்கள் நற்செய்தியின் படி வாழ்ந்து கத்தோலிக்க மறையுண்மைகளையும், விசுவாசத்தையும் தங்கள் வாழ்க்கை முறையினால் பிறருக்கு அறிவித்தார்கள். அதைப்போல மார்த்தா, மரியா சகோதரிகளில், மரியா இயேசுவின் காலடியில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

நாமும் பல வேளைகளில் மார்த்தாவைப்போன்று தேவையற்ற காரியங்கள் நம்மை வீணடிக்கின்றோம். முக்கியமானவற்றையும், தேவையானவற்றையும் மறந்து தேவையில்லாத விஷயங்களில் நம்முடைய காலத்தை வீணடிக்கிறோம்.

ஒவ்வொரு குழந்தையையும் சந்திக்கும் போது நாம் கடவுளையே சந்திக்கிறோம் என்று கூறுகிறது லசாலிய ஆன்மீகம். ஆகவே ஒவ்வொரு லசாலிய அருட்சகோதரருக்கும், ஆசிரியருக்குமான முக்கிய பணி "உடனிருத்தல்". நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுடன் நம்முடைய நல்ல நேரத்தையும், நல்ல பண்புகளையும் செலவிடும் போது மாணவர்களுடைய வாழ்க்கையில் விரும்பத்தக்க மாற்றங்களை கொணடுவர முடியும் என்று புனித தெலசால் கூறுகிறார்.

### தெலசாலின் பொன்மொழி

புனித பிரான்சிஸ் அசிசியார் : உங்களை முழுமையாக ஏழைகளுக்காக ஒப்படைக்க வேண்டியது உக்ஙளது கடமை. நீங்கள் அவர்களை வழிநடத்த கடமைப்பட்டுள்ளீர்கள். நீங்கள் புனித பிரான்சிஸ் அசிசியை போன்று ஏழைகளில் இறைவனைக் காணும் மனநிலை கொண்டுள்ளீர்களா? (MSF)



COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தியில் இயேசு, தம் சீடர்களுக்கு எப்படி ஜெபிப்பது என்று கற்றுத் தருகிறார். இந்த பகுதியானது மத்தேயு 6:9 – 13 லும் காணப்படுகிறது. லூக்காஸ் நற்செய்தியில் உள்ள இறை வேண்டலானது ஆறு பிரிவுகள் அல்லது மன்றாட்டுக்களை உள்ளடக்கியது. இந்த இறை வேண்டலானது அனைத்து மதத்திற்கும் பொதுவான ஜெபம். இதை நம்முடைய மாணவர்களுக்கு பொருட்பட சொல்லிக் கொடுப்பது நம் கடமையாகும்.

நாம் ஜெபிக்கும் போது, குறைந்தது மூன்ற முக்கிய காரியங்களை நம்முடைய ஜெபத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் .

1) கடவுளைப்போற்றி புகழ்தல் 2) பிறருக்காக மன்றாடுதல் 3) மன்னித்தல்,

1) கடவுளை அப்பா, தந்தையே என்று அழைக்கும்போது கடவுளுக்கும், நமக்கும் உள்ள உறவு பலப்படுகிறது. அவரும் நம்மை தம்முடைய குழந்தைகளாக ஏற்றுக் கொள்கிறார். 2) நம்முடைய ஜெபம் சுயநலம் மிக்கதாக இல்லாமல், பொது நலனுக்காக அமைய வேண்டும். நம்முடைய ஜெபம் வெறுமனே, நம்முடைய தேவைகளுக்காக மட்டுமே அமையுமானால் கடவுளை நாம் ஒரு கொடை வள்ளலாக மட்டுமே பார்ப்போமேயன்றி அவரை எல்லாம் அறிந்த, தெரிந்த, எல்லாம் வல்ல கடவுளாக பார்க்க இயலாத நிலையும் ஏற்படலாம். 3) மன்னித்தல் – நாம் ஜெபம் செய்ய தயார் செய்யும் பொழுது, நாம் பிறருக்கு செய்த தவறுக்காகவும், பிறர் நமக்கு செய்த தவறுக்காகவும் மன்னிக்கவும், மன்னிப்பு வேண்டுதலும் மிக அவசியம்.

நம்முடைய குழும வாழ்க்கையில் நமக்கு மிகப்பெரிய சவாலாக இருப்பது பிறரை மன்னிப்பது. நாம் பிறரை மன்னிக்கும் பொழுது, காயப்பட்ட நம் இதயங்களுக்கு நிரந்தர, இயற்கையான சுகம் கிடைக்கிறது நாம் பிறரை மன்னியாது விடும் போது கோபமும், வெறுப்பும் நம்மில் புரையோடி நம்மை நிரந்த நோயாளியாக மாற்றிவிடுகிறது என்று பல ஆய்வுகள் நமக்குத் தெரியப்படுத்துகிறது. இனிமேலாவது இயேசு கற்பித்த ஜெபத்தை சொல்லும் பொழுது பொருள் உணர்ந்து சொல்வோம்.

முதல் வாசகம்
கலாத்தியர் 2:1-2, 7-14

பதிலுரைப்பாடல்
திபா. 117:1-2

நற்செய்தி
லூக்கா 11:1-4

புனித
மரிய ஃபாஸ்டினா
கோவல்ஸ்கா

அக்டோபர் 2022

**05**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

எதனுடனும் இறுக்கமான பற்றுக்கொள்ளாதீர்கள். அப்போதுதான் ஒன்றைவிட்டுக்கொடுப்பதில் எந்த பிரச்சனையும் வராது. (MSF)

COMMUNICATION COMMISSION ★ DE LA SALLE BROTHERS - INDIA ★



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய நற்செய்தியில் இறைவேண்டல் செய்யும்போது நமக்கு இன்னுமொரு உத்தியை கற்றுத் தருகிறார் இயேசு கிறிஸ்து.

நாம் ஒருசில கருத்துக்களுக்காக தொடர்ந்து செபம் செய்து கொண்டே இருப்போம். சில நேரங்களில் நம்முடைய செபங்கள் கேட்கப்படாமலேயோ அல்லது நம்முடைய தேவை நிறைவேறுவதற்கு காலதாமதம் கூட ஆகலாம். அந்த நேரங்களில் நம்முடைய இயல்பான உணர்வு கோபமாக இருக்கலாம் ஏனெனில், கடவுள் நம்மை ஏமாற்றி விட்டார் என்ற எண்ணம் கோப உணர்வாக வெளிப்படும். அந்த கோப உணர்வை வெளிப்படுத்துவதும், கையாள்வதும் மனிதருக்கு மனிதர் மாறுபட்டு காணப்படும்.

நாம் இறைனிடம் கேட்ட மன்றாட்டுக்கள், நிறைவேறுவதில் கால தாமதம் ஏற்படும்போது நம்மில் எழுகின்ற எதிர்மறையான எண்ணங்கள், சிந்தனைகள் நம்மை நாமாக வாழவிடுவதில்லை.

நம்முடைய செபங்கள் நிறைவேறாமல் இருக்கும்போது நாம் மன அமைதியை இழக்கிறோம். அந்த வேளைகளில் கடவுளை பழிப்பதை விட்டு, இன்னும் ஆழமான நம்பிக்கையோடு, இடைவிடாது ஜெபிக்க வேண்டும் என்று இயேசு இன்றைய நற்செய்தி வாசகத்தின் மூலம் அழைப்பு விடுக்கிறார். நாம் நம்பிக்கையோடு, இடைவிடாது செபிக்கும் போது கடவுள் நிச்சயம் நம் ஜெபத்தை கேட்பார். மேலும் உரிய நேரத்தில், உரியதை நமக்கு பெற்றுத்தருவார் என்று இவ்வாசகங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன.

**ஜெபம் :**

கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்; தட்டுங்கள் திறக்கப்படும் என்று கூறிய இறைவா! என் தேவை என்னவென்று அறிந்து, நான் கேட்கும் முன்பே கொடுப்பவரே, எங்களுக்கு இறைநம்பிக்கையையும், செபத்தில் நாட்டத்தையும், இறைத்திட்டம் என்னில் நிறைவேறும் என்ற நம்பிக்கையையும் தந்தருளும் ஆண்டவரே. – ஆமென்.

முதல் வாசகம்
கலாத்தியர் 3:1-5

பதிலுரைப்பாடல்
லூக்கா 1:69-75

நற்செய்தி
லூக்கா 11:5-13

புனித
புரூனோ

அக்டோபர் 2022

**06**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

புனித புரூனா : புனித தெலசால் மாணவர்களை திருப்பலிக்கு அழைத்துச்செல்லும்போது, மக்கள் அனைவரும், வாருங்கள், திருப்பலிக்கு செல்வோம், புனித பாதிரியார் வந்துள்ளார், என்றனர். "செபங்கள் கடவுளின் அருளை தருகிறது மற்றும் சோதனைகளை" விலக்கி வைக்கிறது. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
கலாத்தியர் 3:7-17

பதிலுரைப்பாடல்
திபா. 11:1-6

நற்செய்தி
லூக் 11:15-26

புனித செபமாலை அன்னை

அக்டோபர் 2022

**07**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

இன்று நம் தாய் திருச்சபை ஜெபமாலை அன்னையின் திருவிழாவை கொண்டாடுகிறது. இந்த மாதம் முழுவதும் நாம் தனிப்பட்ட முறையிலோ அல்லது குழுவாகவோ / குடும்பமாகவோ நம்முடைய கருத்துக்களுக்காகவும், பொது கருத்துக்களுக்காகவும் ஜெபமாலை செய்ய அழைக்கிறது. இதற்கு நல்ல பலன் உண்டு என்பதை திருச்சபை உணர்ந்து இருக்கிறது. நம்மையும் தவறாமல் ஜெபமாலை சொல்லத் தூண்டுகிறது.

இன்றைய வாசகங்கள் நாம் நம்பிக்கையினால் இறைவனுக்கு ஏற்புடையோர் ஆவோம் என்பதை நினைவூட்டுகிறது. கடவுள் நம்முடைய நம்பிக்கையை பலப்படுத்த நமக்கு பல சோதனைகளைத் தருவார். ஆனால் அவர் ஒருபோதும் நம்மை கைவிடுவதில்லை. பல நேரங்களில் நம் அவநம்பிக்கையே நமக்கு பாதகமாக அமைகிறது.

புனித தெலசால் முழு நம்பிக்கையையும் கடவுள் மேல் வைத்திருந்தார். இயேசு கிறிஸ்துவே அவரை ஒவ்வொரு செயல்களிலும் வழிநடத்தினார் என்பதை முழுமையாக நம்பினார். நாமும் நம்முடைய பணித்தளங்களிலும், உருவாக்க பணிகளிலும் நம்முடன் பணி செய்யும், வாழுகின்ற ஒவ்வொருவரையும் முழுமையாக நம்ப வேண்டும். ஏனெனில் நாம் அனைவருமே கடவுளின் சாயலிலும், உருவிலும் உருவாக்கப்பட்டுள்ளோம்.

**ஜெபம் :**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் பணிகளின் பொருட்டு எங்கள் மத்தியில் எழுகின்ற கசப்பான அனுபவங்களை மறந்து, நாங்கள், பிறரை நம்பி ஏற்றுக்கொள்ளவும், பிறர் எங்களை புரிந்து ஏற்றுக்கொள்ளவும் தேவையான அருளையும், மனப்பக்குவத்தையும் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம். – ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

செபமாலை மாதா : நமது நிறுவனத்தின்மீது அன்னையின் பாதுகாப்பும், உதவியும் கிடைக்குமாறு செபமாலை ஒப்புக்கொடுக்கிறீர்களா? (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
கலாத்தியர் 3:22-29

பதிலுரைப்பாடல்
திபா: 105:2-8

நற்செய்தி
லூக்கா 11:27-28

புனிதர்கள்
செர்சியுஸ் மற்றும்
பாச்சுஸ்

அக்டோபர் 2022

**08**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக்குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலாத்தி : 4:28) இன்றைய முதல் வாசகம், நாம் கிறிஸ்து இயேசுவை நம் வாழ்வின் மையமாக கொண்டுள்ள போது, நம்மிடையே பிளவுகள் இருக்காது. நம்முடைய பணித்தளங்களிலும், குடும வாழ்விலும் ஜாதி, சமயக்கோட்பாடு, ஏழைகள் மற்றும் பணக்காரர்கள் என்ற வேறுபாடு பார்க்காது, நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் என்று என்னும் போது அன்பு ஒன்றே நம் வாழ்க்கையின் இலக்காகிறது.

இன்றைய நற்செய்தி வாசகம், இறைவார்த்தையை கேட்டு அதன்படி நடப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றோர் என்கிறது. இறைவார்த்தையை அறிந்து கொள்வது முதல் நிலை என்றால் அதனை நம் வாழ்வாக்குவது இரண்டாம் நிலை. புனித தெலசாலுக்கு, அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளில் இருந்து மீண்டு வருவதற்கான எல்லா வழிகளையும், வழிமுறைகளையும் இறைவார்த்தையில் கண்டுணரச் செய்தது. அதனால், அவரால் தனக்கு ஏற்பட்ட அனைத்து சோதனைகளையும், துன்பங்களையும் கடவுளின் திருவுளமாக காணக்கூடிய மனப்பக்குவமும், நம்பிக்கையும் கிடைத்தது.

**ஜெபம் :**

இன்பச்சுனையாகிய இறைவா! உம்மைப் பற்றி அறியவும், உம் வார்த்தையை தேர்ந்து, தெரிந்து கொள்ளத் தேவையான ஞானத்தையும், உம் வார்த்தையின்படி வாழவும் தேவையான மன உறுதியையும், ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம். - ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலிமிருந்து இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் செபமாலை செபிப்பது, செபங்கள் வழி நடத்துவதற்கு நியமிக்கப்பட வேண்டும். (The Conduct)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய வாசகங்களும், இன்றைய லசாலிய சபை புனிதர்கள் ஷெய்மே ஹில்லாரி மற்றும் அஸ்தூரியஸ் நகரத்து மறை சாட்சிகளுக்கும் தொடர்பு உள்ளதை காணமுடிகிறது.

கடவுள் மனித சமூகத்தின் மேல் வைத்திருந்த அன்பையும், அவரது நம்பிக்கையும் மட்டும் இருந்தால் நம்மால் எதுவும் செய்யமுடியும் என்பதை இன்றைய வாசகங்கள் நினைவுருத்துகின்றன.

புனித ஷெய்மே ஹில்லாரியோ அதித இறை நம்பிக்கையும், தான் பெற்ற இறை அழைத்தலிலும், துறவற வாழ்க்கையிலும் மிகவும் வேரூன்றி மிக ஈடுபாட்டுடன் இருந்தார். ஸ்பெயின் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தின் போது குருக்களும், துறவிகளும் படுகொலை செய்யப்பட்ட போது இவரும் கைது செய்யப்பட்டார். கலவரக்காரர்கள், இவரை நான் ஒரு துறவி அல்ல சாதாரண தோட்டக்காரன் என்று கூற நிர்ப்பந்தித்த போது இந்த உலகில் உள்ள அனைத்து செல்வங்களையும் எனக்கு கொடுத்தாலும், நான் ஒரு துறவி என்பதையும், என்னுடைய துறவற ஆடையையும் விட்டுத்தர மாட்டேன் என்று உறுதியாக இருந்தார். புனித ஷெய்மே ஹில்லாரியோ இறை நம்பிக்கையையும், தான் ஒரு துறவி என்ற அடையாளத்தையும் விட்டுத்தராத காரணத்தினால் சுட்டுக்கொள்ளப்பட்டார். இந்த அருட்சகோதரருடைய இறை நம்பிக்கையும், இறை அழைத்தலின் மேல் உள்ள பற்றும் இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தியது.

**ஜெபம் :**

அழைத்தலின் நாயகனே இறைவா! புனித ஷெய்மே ஹில்லாரியைப் போல நாங்களும் இறை நம்பிக்கையில் வளரவும், வாழவும், இறைப்பணி செய்வதில் அவரிடத்தில் உள்ள ஆர்வத்தையும் எங்களுக்கு கொடுத்தருள வேண்டும் என்று மன்றாடுகின்றோம். – ஆமென்.

முதல் வாசகம்
2 அரசர்கள் 5:14-17

இரண்டாம் வாசகம்
2 திமொத்தேயு 2:8-13

நற்செய்தி
லூக்கா 17:11-19

லசாலிய புனிதர்
ஹெய்மே ஹில்லாரி

பொதுக்காலம்
28-ம்
ஞாயிறு

அக்டோபர் 2022
**09**
ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிேனேஷ்** FSC



**தெலசாலின் பொன்மொழி**

புனித ஹமோ ஹிலாரி, FSC

ஒவ்வொரு சகோதரனும் தன் சகோதரர்களின் துயரத்தில் பங்கேற்க வேண்டும் (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இன்றைய முதல் வாசகம் அடிமை நிலைக்கும், உரிமை வாழ்வுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துரைக்கிறது. கிறிஸ்து இயேசுவே அடிமை நிலையிலிருந்து நம்மை மீட்டு உரிமை வாழ்வுக்கு அழைத்துச் சென்றார்.

உலகளாவிய நம்முடைய லசாலிய பணியில் பலதரப்பட்ட குழந்தைகளுக்கு கிட்டதட்ட 340 வருடங்களாக கல்வி பணி செய்து, இக்குழந்தைகளை சமூகத்தில் நற்பண்பும், நற்மதிப்பும் கொண்ட மனிதனாக மாற்றி அவர்களுடைய நிறை, குறைகளை சுதந்திரமாக எடுத்துரைக்க வாய்ப்பளித்திருக்கின்றோம். இந்தப் பணியை தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறோம். இதுவும் ஒரு விதத்தில் புனித பவுலடியார் எடுத்துரைக்கும் உரிமை வாழ்வு. இந்த உரிமை வாழ்வை தொடாந்து கொண்டுவர லசாலிய அருட்சகோதரர்களும், ஆசிரியர்களும் மறு கிறிஸ்துவாக இருந்து தொடர்ந்து பாடுபட வேண்டும். எந்த சூழ்நிலையிலும் இந்தப் பணியை செய்வதில் தளர்ச்சி வந்துவிடக்கூடாது.

ஜெபம் :

நல்ல இயேசுவே! லசாலிய குடும்ப உறுப்பினர்களாகிய நாங்கள், எங்கள் பணியை பொது நலத்துடனும், தளராத உள்ளத்துடனும், மிளிரும் ஆர்வத்துடனும் செய்ய தேவையான மன உறுதியையும், நல்ல எண்ணத்தையும் தந்தருளும்.
– ஆமென்.

முதல் வாசகம்
கலாத்தியர் 4:22-24,26-27,31 5:1

பதிலுரைப்பாடல்
தி.பா. 113:1-7

நற்செய்தி
லூக்கா 11:29-32

பிரான்சிஸ் போர்ஜியா

அக்டோபர் 2022
**10**
திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

### தெலசாலின் பொன்மொழி

திவ்விய நற்கருணை உங்களுக்கும், இயேசுவுக்கும் இடையே வலுவான ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. அவரைவிட்டு விலகிச்செல்ல இயலாது. (MSF)





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
கலாத்தியர் 5:1-6

பதிலுரைப்பாடல்
திபா. 119 :41-48

நற்செய்தி
லூக்கா 11:37-41

புனித 23-ம் ஜான்

அக்டோபர் 2022

**11**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

அன்பின் வழியாய் செயலாற்றும் நம்பிக்கை ஒன்றே இன்றியமையாதது என்கிறார் புனித பவுலடியார். திருச்சட்டத்தையும், ஒழுங்குமுறைகளையும் மட்டும் கடைப்பிடித்தால் நாம் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆக முடியாது என இன்றைய வாசகங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

நாமும் பல சமயங்களில் பரிசேயர்களைப் போல ஒழுங்கு விதிமுறைகளுக்கும், வெளிப்புற அடையாளங்களுக்கும் தான் அதித முன்னுரிமை கொடுக்கிறோம். இவ்வாறு வாழ்வதால் நாம் விண்ணரசுக்கு ஏற்புடையவராக முடியாது. மாறாக, நம் வாழ்வு பிறரன்பு சேவைகளில் மனித நேயத்தோடு இருக்கும் போது தான் நம் வாழ்க்கைக்கு அர்த்தமுண்டு.

அனைத்து நற்காரியங்களுக்கும் அடிப்படையாய் இருப்பது அன்பு மட்டுமே. புனித தெலசால் ஏழைக் குழந்தைகள் மேல் கொண்ட அன்பு தான் இந்த லசாலிய இயக்கமாக உருவெடுத்தது. அன்பும், இரக்கமும், ஒழுக்கமும் கலந்த லசாலியப் பணியை செய்யும்போதும் இவ்வுலகில் நமக்கு கைம்மாறு கிடைப்பதில்லை என்று நம்மில் பலரும் வேதனைப்படலாம். ஆனால் இந்தப் பணியின் பொருட்டு நாம் நிச்சயம் மேன்மை அடைவோம் என்று புனித தெலசால் கூறுகிறார்.

**ஜெபம் :**

இரக்கம் நிறைந்த இறைவா! எங்களுடைய பணி வாழ்வில் உடனடி வெற்றிகளால் மனநிறைவு அடையாமல், நிலையான மன அமைதி தருகின்ற காரியங்களில் எங்களுடைய எண்ணங்களையும், செயல்களையும், ஆற்றலையும் பயன்படுத்த தேவையான வரம் தாரும் - ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

இளையோரிடம் கடினமான முறையில் நடந்து கொள்வது எத்தகைய நற்பயனையும் தராது (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

திருச்சட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய இடங்களில் கடவுளின் அன்பு இருக்காது என்பதை இன்றைய வாசகங்கள் கோடிட்டு காட்டுகின்றன.

தூய ஆவியின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் இருக்கும் இடங்களில் திருச்சட்டத்திற்கு இடமில்லை. இயேசு கிறிஸ்து திருச்சட்ட அறிஞரை கடுமையாக சாடுகிறார். நீங்கள் தேவையற்ற சுமைகளை மக்கள் மீது சுமத்திவிட்டு, ஒரு விரலால் கூட அந்த சுமைகளை தொட மாட்டீர்கள் என்றும் கண்டிக்கிறார்.

நாமும் நம்முடைய குழும வாழ்விலும், பணித்தளங்களிலும், உடன் வாழுகின்ற, உடன் பணிபுரிகின்ற நண்பர்களின் மேல் உள்ள பொறாமை, கட்சி மனப்பான்மை, பிரிவினை மற்றும் வெறுப்பு காரணமாக செயல்படும் பொழுது துய ஆவிக்கு எதிராக செயல்படுகிறோம் என்று உணரவேண்டும்.

புனித தெலசால் இந்த துறவற சபையை தொடங்கி, இந்தப் பணியை செய்யும் பொழுது அவருக்கு ஏற்பட்ட அனைத்து நிந்தை, அவமானங்களையும் இறைவன் பாதம் சமர்ப்பித்து ஜெபித்தார். மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் ஊனியல்பின் படி பிறரை மனநோகச் செய்கிறோம். இதற்கு யாரும் விதிவிலக்கு அல்ல. ஆனால் ஊனியல்பின் செயல் என்று அதிலே வேரூன்றி கிடப்பது தூய ஆவியின் கனிகளுக்கு எதிரானது.

முதல் வாசகம்
கலாத்தியர் 5:18-25

பதிலுரைப்பாடல்
திபா. 1:1-6

நற்செய்தி
லூக்கா 11:42-46

யோர்க் நகர் புனித வில்ஃபிரட்

அக்டோபர் 2022

**12**

புதன்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

கடவுளின் அருளைபெற உங்களையே நீங்கள் கடினமான செயங்களில் ஈடுபட கடமைப்பட்டிருக்கிறீர்கள். உங்களையும், பிறரையும் அந்த அருள் புனிதப்படுத்தும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

இயேசு கிறிஸ்து திருச்சட்ட அறிஞர்களைப் பார்த்து, அறிவுக்களஞ்சியத்தின் திறவுகோலை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள். நீங்களும் நுழைவதில்லை. நுழைவோரையும் தடுக்கிறீர்கள் என்ற கூறுகிறார். இந்த கருத்தை ஆழமாக சிந்தித்தோமென்றால் திருச்சபையை வழிநடத்தக் கூடியவர்களுக்கு இது சரியாக பொருந்தும்.

ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர்கள் அனைவரும் திருச்சபையை வழிநடத்தக்கூடியவர்கள். நம்முடைய முக்கியமான பணி மேய்ப்பு பணி. நாம் நம்முடைய இறைபக்தி, ஆன்மீக செயல்கள் மற்றும் முற்போக்கு எண்ணங்களினால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் ஆன்மாக்களை மீட்டெடுப்பது நமது கடமை. சில நேரங்களில் நம்முடைய தவறான வாழ்க்கை முறையினாலும், பலவீனமான முன்னுதாரணங்களினாலும், நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை சிதறடிக்கிறோம். இறைபக்தியும், இறை விசுவாசமும், மனித நேயமும், நீதி தவற நாமே காரணமாக இருக்கிறோம். நாமே ஜாதியினாலும், மொழியினாலும் பிளவுப்பட்டு கிடக்கும்போது நாம் எப்படி அறவழியிலும், இறை வழியிலும் மக்களை வழிநடத்த முடியும்?

லசாலிய பணியின் இரு கண்கள் ஒளிரும் விசுவாசம், மிளிரும் ஆர்வம் ஆகும். இன்றைய நற்செய்தி வாசகத்திற்கு மிளிரும் ஆர்வம் மிகச் சரியாக பொருந்துகிறது. நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் பாவத்தில் விழாமலும், பாவம் சார்ந்த எண்ணங்கள் வளராமலும் அவர்களை பாதுகாப்பதுவே மிளிரும் ஆர்வம் என்று நம்முடைய சபையின் விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்து கொள்வோம்.. அதன்படி வாழ, வழிகாட்ட முயற்சி செய்வோம்.

முதல் வாசகம்
எபேசியர் 1:1-10

பதிலுரைப்பாடல்
திபா. 98:1-6

நற்செய்தி
லூக்கா 11:47-54

புனித எட்வர்ட்

அக்டோபர் 2022
**13**
வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

உங்கள் இறையழைத்தலின் காரணத்தை அடிக்கடி நினைத்து பாருங்கள், இது இறையாட்சியை உங்கள் மாணவர்களின் மனதில் பரப்ப உதவும். (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 1:11-14

பதிலுரைப்பாடல்
திபா. 33:1-2,4-5,12-13

நற்செய்தி
லூக்கா 12:1-7

புனித முதலாம் கலிஸ்டஸ்

அக்டோபர் 2022

**14**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

யாருக்கு அஞ்ச வேண்டும்? என்று இயேசு கிறிஸ்து இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகிறார். நாம் ஒவ்வொருக்குமே பலவித அச்சங்கள் உள்ளன. உண்மை பேச பயம், நீதியோடு, நேர்மையோடு வாழ பயம், பொது இடங்களில் இயல்பாக பேச பயம், எளிமையாக இருக்க பயம் என்று நாம் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இவற்றோடு வாழவும், இவற்றை கடந்து செல்லவும் கற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த பயங்கள் எல்லாம் நம்மேல் நாம் வைத்திருக்கக்கூடிய அவநம்பிக்கையின் வெளிப்பாடுகள். நம்முடைய தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளும் போது இவை அனைத்தும் மறைந்து போகின்றன.

இயேசு கிறிஸ்து குறிப்பிடுகின்ற அச்சம் "இறைபயம்" ஆகும். இவ்வுலகில் காணக்கூடிய எல்லாமே அழிந்துபோகக் கூடியது. அழிவில்லாதது நம் ஆன்மா மட்டும்தான். அது கடவுளுக்கு உரியது. இறை சித்தத்தை அறிந்து, இறை மதிப்பீடுகளின் படி நாம் வாழும் பொழுது நம் ஆன்மா மீட்பினை அடைகிறது.

லசாலிய வாழ்வு என்பது இறை பிரசன்னம், இறை நம்பிக்கை மற்றும் இறைபயத்தை அடிப்படையாகக் கொண்டது. புனித தெலசால் இறைவனில் நம்பிக்கை வைத்து இறை சித்தத்தை தேர்ந்து தெளிந்து அதன்படி தானும் வாழ்ந்து பிறரையும் வாழ பணித்தார்.

நாம் இறைபயத்தில் வளரும்போதும், வாழும் போதும் இறை சித்தமே முன்னுரிமை பெறுமே அன்றி மனித சித்தம் வலுவிழந்து நிற்கும். நான் இறை சித்தத்திற்கு முன்னுரிமை அளிக்கிறேனா? அல்லது எனது விருப்பு, வெறுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கிறேனா? சிந்திப்போம்.

### தெலசாலின் பொன்மொழி

நாம் எவ்வளவு கேட்கிறோமோ, அதற்கு மேலாக கடவுள் தருகிறார். அவர் வழங்குவதில் மகிழ்ச்சி காண்பவர். (MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எபேசியர் 1:15-23

பதிலுரைப்பாடல்
திபா. 8:1-6

நற்செய்தி
லூக்கா 12:8-12

புனித
அவிலா
தெரசா

அக்டோபர் 2022

**15**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிணேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

கடவுள் நம்மை படைத்தவர், வழிநடத்துகிறவர், பாதுகாக்கிறவர், ஆகவே அவரைப் புகழ்தலே நம்முடைய தலையாய கடமை. மானிட மகனுக்கு எதிராக பேசுபவர் கூட மன்னிப்பு பெறுவர். ஆனால் தூய ஆவியாரைப் பழித்து பேசுபவருக்கு மன்னிப்பே கிடையாது என்று இன்றைய நற்செய்தி கூறுகிறது.

தந்தை, மகன், தூய ஆவி என்ற மூன்று பேருமே ஒரே கடவுளாய் இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தனிச்சிறப்பு உண்டு. அந்த வகையில் தூய ஆவியானவர் வழிநடத்துபவராகவும், வலுவூட்டுபவராகவும் இருக்கிறார். நம்மோடு இருந்து நாம் அறிவிக்க வேண்டியவற்றை வெளிப்படுத்துகிறார்.

இன்று நம் தாய் திருச்சபை புனித அவிலா தெரசம்மாவின் நினைவு நாளை கொண்டாடுகிறது. இவர் மிகச்சிறந்த ஆன்மீகவாதி. இவர் தன்னுடைய ஆன்மீக வாழ்வில் முழுமையும், இறைவெளிப்பாட்டில் பேரானந்தத்தையும் உணர்ந்தவர். கடவுளுடைய திட்டத்தை ஆய்ந்தறிந்து தூய ஆவியின் துணையோடு கார்மேல் கன்னியர் துறவற சபையில் பல மாற்றங்களை கொண்டு வந்தார்.

நாமும் நம்முடைய வாழ்க்கையில், பணித்தளங்களில் இறைத்திட்டத்தை நிறைவேற்றும் போது இது தூய ஆவியின் தூண்டுதலால் நடைபெறுகிறதா என்று அறிய நம்மை நாமே ஜெபத்தில் ஒப்புக்கொடுத்து இறைவெளிப்பாட்டுக்காக காத்திருக்க வேண்டும்.

**ஜெபம் :**

மூவொரு இறைவா! என்னுடைய எல்லா செயல்களிலும் நான் இறைத்திட்டத்தை அறிந்து, இறை ஆட்சியை இம்மண்ணில் நிலைநாட்ட தூய ஆவியின் தூண்டுதலையும், வழிநடத்துதலையும் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறேன். - ஆமென்.

**தெலசாலின் பொன்மொழி**

புனித அவிலா தெரசம்மா

ஜெபிக்கும் இடத்தில் இறையாவி குடிகொண்டிருக்கும்.



COMMUNICATION COMMISSION DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
வி.ப 17:8-13

இரண்டாம் வாசகம்
2 திமொ 3:14-4:2

நற்செய்தி
லூக்கா 18:1-8

பொதுக்காலம்
29-ம்
ஞாயிறு

அக்டோபர் 2022

**16**

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

தாம் தேர்ந்து கொண்டவர்கள் அல்லும், பகலும், அவரை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? என்று லூக்கா நற்செய்தியாளர் நம்மை இன்று சிந்திக்க அழைக்கிறார். இன்றைய நற்செய்தியின் மைய கருத்து மனம் தளராமல் இடைவிடாது ஜெபியுங்கள் என்பதாகும்.

இயேசு கிறிஸ்துவும், புனித பவுல் அடிகளாரும் இடைவிடாது ஜெபியுங்கள் என்ற கருத்தை மீண்டும் மீண்டும் தங்களுடைய சீடர்களுக்கு அறிவுறுத்துவதை காண முடிகிறது. ஏனெனில் ஜெபம் செய்யும் போது கடவுளை உரிமையுடன் அப்பா, தந்தாய் என்று அழைக்கிறோம். நாம் அனைவரும், அவருடைய குழந்தைகள் என்ற எண்ணம் வரும்பொழுது கடவுள் நம்முடைய பொறுமையும், பலவீனத்தையும் அறிய காலம் தாழ்த்துவார். மனித பலவீனங்களினால் நம்முடைய ஜெப வாழ்வில் தொய்வு ஏற்படக் கூடாது. தொடர்ந்து மனம் தளராது ஜெபிக்கும் பொழுது கடவுள் நம் ஜெபங்களை கேட்பார் என்பதற்கு இன்றைய நற்செய்தி வாசகத்தில் வரும் கைம்பெண்ணே மிகச்சிறந்த உதாரணம். ஜெபிப்பதே சிறந்த பண்பு; அதிலும் மனம் தளராது இடைவிடாமல் ஜெபிப்பது, சாலச் சிறந்தது.

**ஜெபம் :**

நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா! மனித பலவீனங்களினால் நான் உம்மை சந்தேகப் பட்டதற்காக வருந்துகிறேன். நான் ஜெபத்தில் உறுதியாக நிலைத்து நிற்பதற்கு தேவையான அருளையும், ஜெபம் செய்யக்கூடிய அமைதியான மனநிலையினையும் தந்தருளும் ஆண்டவரே. – ஆமென்.

**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, இந்த பணிக்கான சுய ஆர்வம் இல்லையென்றால், அது வெற்றி பெறாது.
[கடிதம் – 15]





# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 2:1-10

பதிலுரைப்பாடல்
திபா. 100:1-5

நற்செய்தி
லூக்கா 12:13-21

புனித இஞ்ஞாசியார்

அக்டோபர் 2022

**17**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC


அருளில்லார்க்கு அவ்வுலகு இல்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை என்று திருக்குறள் விளக்குகிறது. மனிதனுடைய இயல்பான குணம் எதிர்காலத்திற்கு செல்வங்களை சேர்த்து வைப்பது. அதற்கான முயற்சியில் நாம் நம்முடைய நிகழ்காலத்தை பண்பற்ற முறையினாலும், ஒழுக்கம் கெட்ட வாழ்க்கையாலும் வீணடிக்கிறோம்.

வாழுகின்ற நாட்களில் பிறருக்கு தேவையான உதவிகளை செய்யும் பொழுது நமக்கு புண்ணியங்கள் அதிகமாக கிடைக்கிறன. நாம் பிறரன்பு இல்லாமல் செல்வத்தை சேர்க்கும் போது அதனால் நமக்கு எந்த பயனுமில்லை.

இன்றைய புனிதர் அந்தியோக்கு நகர் இஞ்ஞாசியார் இவர் இயேசு கிறிஸ்துவின் மீது தீராத அன்பும், இயேசுவுக்காக மறை சாட்சியாக மரிக்கவேண்டும் என்ற தாகமும் கொண்டிருந்தார். திருச்சபையின் விதிமுறைகளையும், கிறிஸ்தவ வாழ்வின் பாங்கினைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். கத்தோலிக்க திருச்சபை என்ற வார்த்தையை முதன் முதலாக பயன்படுத்தியவரும் இவரே. கடவுள் மேல் உள்ள அன்பினால் கொடிய காட்டு விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

**ஜெபம் :**

அன்பு இயேசுவே! நாங்களும் புனித அந்தியோக்கு நகர் இஞ்ஞாசியாரைப் போல பொருட்செல்வத்தை நாடாமல், இறை அருளை தேடவும், அவருக்காக வாழவும், பணி செய்யவும் தேவையான மனதை தந்தருள வேண்டுமென்றும், எங்களுடைய வாழ்க்கை கிறிஸ்துவையே முழுமையாக சார்ந்து இருக்க தேவையான பக்குவத்தையும் மனத்திடத்தையும் தாரும். - ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் : நீங்கள் இயேசு கிறிஸ்துவை சிறப்பான முறையில் அன்பு செய்தால், உங்கள் மாணவர்களின் இதயத்தில் அவரை கொண்டுசெல்ல அணைத்து முயற்சிகளையும் செய்விர்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
2 திமொ 4:9-17

இரண்டாம் வாசகம்
திபா. 145:10-13,17-18

நற்செய்தி
லூக்கா 10:1-9

புனித லூக்கா நற்செய்தியாளர்

அக்டோபர் 2022

**18**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

புனித லூக்கா நற்செய்தியாளருடைய திருவிழாவை திருச்சபை இன்று கொண்டாடுகிறது. இந்த மாத நற்செய்தி முழுவதும் லூக்கா நற்செய்தியில் இருந்து எடுக்கப்பட்டது. இயேசு நியமித்த எழுபத்திரண்டு சீடர்களில் ஒருவராக இவர் இருக்கலாம் என்று நம்பப்படுகிறார். புனித பவுலடிகளாரின் மறைபரப்புப் பணி பயணங்களில் அவர் உடனிருந்தவர். லூக்கா நற்செய்தியையும், திருத்தூதர் பணி நூலையும் எழுதியவர். இவர் படம் வரையும் கலைஞர்களுக்கு பாதுகாவலராக உள்ளார்.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் சீடத்துவத்தை மையப்படுத்துகிறது. சீடத்துவத்தின் இரண்டு தலையாய பண்புகள், கிறிஸ்துவோடு இருக்கவும், கிறிஸ்துவின் அனுப்பப்படவுமே ஆகும். இன்றைய காலச்சூழலில் கிறிஸ்து சீடர்களாக பணியாற்றுவதற்கு முன்பை விட தேவை அதிகரித்துள்ளது. ஆனால் கிறிஸ்துவுக்காக பணி ஆற்றுவது என்பது பல இடங்களில் சவால் நிறைந்ததாகவே உள்ளது.

நாம் பிறரன்பு பண்புகளில் ஈடுபடும்போது, நம்முடைய நல்ல எண்ணங்களையும், செயல்களையும், சாட்சிய வாழ்வையும் தான் முன்னுதாரணமாக கொடுக்க வேண்டியுள்ளது. அவைகளை தான் முன்னிலைப்படுத்த வேண்டியுள்ளது.

லசாலியப் பணியின் சராம்சம் என்பது மனித நேயத்தோடு கலந்த கிறிஸ்தவக் கல்வியை வழங்குவது. கிறிஸ்தவக் கல்வி என்று கூறுவது தாராள மனத்துடன் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு நம் வாழ்க்கையை சுயநலம் இன்றி தியாகம் செய்வதை குறிக்கிறது. லசாலிய குடும்ப உறுப்பினர்களாகிய நாமும், கிறிஸ்துவின் சீடர்களைப் போன்று நம் எதிர்பார்ப்பு இல்லா வாழ்க்கையினாலும், செயலினாலும் கிறிஸ்துவை பிரதிபலிக்க முயற்சி செய்வோம்.



### தெலசாலின் பொன்மொழி

புனித லூக்கா : உங்களை வழிநடத்தும் ஒளியாக உங்கள் விசுவாசம் இருக்க வேண்டும். நீங்கள் வழிகாட்டுபவர்களுக்கும் அது விளக்காக இருந்து அவர்களை விண்ணகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 3:2-12

பதிலுரைப்பாடல்
எசா 12:2-6

நற்செய்தி
லூக்கா 12:39-48

திமொத்தேயு
கியாக்கர்தோ

அக்டோபர் 2022

**19**

புதன்கிழமை

மிகுதியாகக்கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும். மிகுதியாக ஒப்படைக்கப்பட்டவரிடம் இன்னும் மிகுதியாகக் கேட்கப்படும். இன்றைய வாசகத்தில் இறைமகன் இயேசுகிறிஸ்து, தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நேர்மையுடன் செய்து முடிப்பவர் பேறுபெற்றவர் என்கிறார்.

தூய ஆவியினால் நமக்கு அருளப்பட்ட வரம் "கல்விப்பணி". இப்பணியை ஆற்றுகின்ற லசாலிய அருட்சகோதரர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்த உவமையானது சிறப்பாக பொருந்தும். ஒரு அருட்சகோதரராக, ஆசிரியராக கடவுள் நம்மை இந்தப் பணிக்கு தேர்ந்தெடுத்து அழைத்திருக்கிறார். ஆகவே நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்கள் பொருட்டு நாம் ஒவ்வொருவரும் கடவுளிடம் கணக்கு கொடுக்க வேண்டியுள்ளது.

நான் என்னுடைய மாணவர்களை மரியாதையுடனும், கண்ணியத்துடனும் நடந்துகிறேனா? என் மாணவர்களுடைய குழந்தை மனம் மாறாமல் அவர்கள் பாவம் சார்ந்த எண்ணங்களும், சிந்தனைகளும் வராமலும், பாவம் சார்ந்த விழிப்புணர்வும், பாவத்தின் மேல் வெறுப்பும் ஏற்படுமாறு என்னுடைய சொல்லும், செயலும் இருக்கின்றனவா என்று சிந்தித்து பார்க்க வேண்டும். நம்மிடம் மிகுதியாகவே கொடுக்கப்பட்டுள்ளது ஆதலால் மிகுதியாகவே எதிர்பார்க்கவும், கேட்கவும் படும்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, நீங்கள் விசுவாச கண்க்ளில் ஒரு நிகழ்வை பார்ப்பதற்கும் பிறர் அதனை இயல்பாக பார்ப்பதற்கும் வித்தியாசம் உள்ளது. (கடிதம் - 118)

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 3:14-21

பதிலுரைப்பாடல்
திபா. 33:1-2,4-5,11-12,18-19

நற்செய்தி
லூக்கா 12:49-53

புனித பெர்டில்லா போஸ்கார்டின்

அக்டோபர் 2022

**20**

வியாழக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

இன்றைய முதல் வாசகம் கிறிஸ்துவின் அன்பைப் பற்றி பேசுகிறது. ஆனால் நற்செய்தியில் இயேசு கிறிஸ்து, மண்ணில் நான் தீ மூட்டவே வந்தேன் என்கிறார். இந்த இரண்டு வாசகங்களுமே அன்பை மையமாக கொண்டவை.

அன்பு பொறாமைபடாது, இழிவானதை செய்யாது. மாறாக அன்பு பொறுமை உள்ளது. நிறைவானதை செய்யும். நாம் இறையன்பில் வேரூன்றும் போது நம்முடன் வாழக்கூடிய அனைவரிடமும் பரிவுடனும், கனிவுடனும் நடந்து கொள்வோம். சுயநலம் அழிந்து பிறர் நலம் கொண்டவர்களாவோம்.

உண்மையான அன்பு இருக்கும் இடங்களில், நாம் குறைகளை பார்க்காமல், நிறைகளை பார்க்க தொடங்குவோம்; கோபம் தணிந்து நிதானமும், முன்மதியும் நம்மை செயல்பட வைக்கும்.

புனித தெலசால் மாணவர்கள் மேல் வைத்த தன்னலமற்ற அன்பினால் தனக்கிருந்த அனைத்தையும் தியாகம் செய்தார். இந்த அன்பின் பொருட்டு தனக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், அவமானங்களையும் இது கடவுளின் விருப்பம் என்று ஏற்று கொண்டார். எச்சூழலிலும் அவரது அன்பு குறையவே இல்லை.

**ஜெபம் :**

அன்பின் ஆண்டவரே, நான் பணி செய்கின்ற இடங்களில், எல்லா நேரத்திலும் உமது அன்பை மட்டுமே பிறரோடு பகிரவும், பிரதிபலிக்கவும் தேவையான மன உறுதியையும், இறை அருளையும் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம். – ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

ஆசிரியர்கள் தவிர்க்க வேண்டிய குணாதிசயங்கள் :
அதிகமாக பேசுவது, சிந்தனையற்றிருப்பது, கடினமாக நடத்தல், பொறுமையின்மை, ஆள்பார்த்து செயல்படல், ஊக்கமற்று இருப்பது, கவன சிதறல். (The Conduct)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபே 4:1-6

பதிலுரைப்பாடல்
திபா. 24:1-6

நற்செய்தி
லூக்கா 12:54-59

புனித பெரிய ஹிலேரியஸ்

அக்டோபர் 2022

**21**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

முழு மனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். என்று புனித பவுலடியார் எபேசு நகர மக்களுக்கு அறிவுரை வழங்குகிறார்.

அன்புடனும், அமைதியுடனும் வாழ தாழ்ச்சி, கனிவு மற்றும் பொறுமை அவசியம் என்கிறது இன்றைய முதல் வாசகம். ஒரு நல்லாசிரியருக்கு இருக்கவேண்டிய 12 நற்பண்புகளில் இந்த மூன்று மதிப்பீடுகளும் அடங்கும்.

இக்காலச் சூழலில் இந்த மூன்று மதிப்பீடுகளையும் ஒருங்கிணைத்து ஒரு மனிதனிடம் காண்பது மிக அரிது. ஆசிரியப் பணியில் இருப்பவர்களுக்கு இந்த மூன்றும் மிகவும் அவசியம். ஏனெனில் இந்த பண்புகளை நம் வாழ்வில் பிரதிபலிக்கும் போதுதான் அது நம் மாணவர்களின் இதயத்தை தொடும் என்கிறார் புனித தெலசால். இல்லாவிடில் நம்முடைய கல்விப்பணி வெறுமனே புத்தக அறிவை மட்டுமே புகட்டுவதாகவே இருக்கும். மதிப்பீடுகள் இல்லாத கல்வி அறிவு தீவிரவாதத்தை தான் உருவாக்கும் என்பது பல கல்வியாளர்களுடைய கருத்து. நான் என்னுடைய கற்பித்தல் முறையில் மதிப்பீடுகளுக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கிறேனா என்று சிந்தித்து பார்ப்போம்.

**ஜெபம் :**

நல்ல இயேசுவே! என்னுடைய கற்பித்தல் பணியில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு புத்தக அறிவோடு மதிப்பீடுகளையும் சேர்த்து கற்றுத்தர போதிய சிந்தனையும், திடமும் தந்தருளும். ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, உம் இறையழைத்தலின் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பு எனக்கு நிறை அமைதியை தருகிறது. கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக! (கடிதம் - 85)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 4:7-16

பதிலுரைப்பாடல்
திபா. 122:1-5

நற்செய்தி
லூக்கா 13:1-9

புனித இரண்டாம் ஜான்பால்

அக்டோபர் 2022

**22**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

காய்க்காத அத்திமரத்தின் உவமை கிறிஸ்தவ வாழ்வில் நம்முடைய நிலை என்ன என்பதை சிந்திக்க அழைக்கிறது. இவ்வுவமையில் வரும் தோட்டக்காரரை கடவுளாகவும், காய்க்காத அத்திமரத்தை நாமாகவும் உருவகப்படுத்தும் போது இந்த உவமையின் அவசியத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

நாம் மனித பலவீனங்களினால் எவ்வளவு தவறு செய்தாலும், பாவம் செய்தாலும் நம்முடைய மனமாற்றத்திற்காக காத்திருக்கிறார் இயேசு கிறிஸ்து.

லசாலிய வாழ்விலும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை வழிநடத்தும் பொழுது, இந்த மாணவனை ஒன்றும் செய்யமுடியாது என்ற எண்ணம் வரும்போது இந்த உவமையில் வரும் தோட்டக்காரரை நினைவில் கொள்ள வேண்டும். இந்த தோட்டக்காரரைப்போல் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளிடம் அன்பும், அரவணைப்பும், சரியான அணுகு முறையும், தனிநபர் கவனமும் கொடுக்கும் போது கண்டிப்பாக விரும்பத்தகுந்த மாற்றங்களை குழந்தைகளிடத்தில் கொண்டு வரமுடியும்.

**ஜெபம் :**

எல்லாமுமாய் இருக்கின்ற எங்கள் தந்தையே! கற்றல் மற்றும் வழிநடத்துதல் பணியை செய்யக்கூடிய எங்களுக்கு மனச்சோர்வும், தயக்கமும் வரும் போதெல்லாம் எங்களை உமது தூய ஆவியின் வரங்களால் நிரப்பி, நாங்கள் எங்கள் பணிகளை செவ்வனே மனநிறைவுடன் செய்ய ஆற்றல் தாரும். - ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

நீங்கள் செப இல்லங்களில் வாழ்வதில்லை. மாறாக உங்கள் உடல்களே செப இல்லங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முத்திப்பேறு பட்டம் பெற்ற அருட்சகோதரர். அர்னால்டு ரோஷேவை நினைவு கூறுகிறது லசாலிய குடும்பம். இவர் வாழுகின்ற பொழுதே புனிதத்தன்மையுடன் வாழ்ந்தார் என்று அவரது வாழ்க்கை குறிப்பு கூறுகிறது. 1888 ம் ஆண்டு புனித தெலசாலுக்கு முத்திப்பேறு பட்டம் கொடுக்கும் நிகழ்வில் சபையின் அன்றைய தலைவர், அருட்சகோதரர் அர்னால்டு அவர்களை தெலசாலின் திருப்பண்டத்தை சுமந்து வரச் சொன்னார். இந்த நிகழ்வானது சபைக்குறிப்பில் "அதோ ஒரு புனிதர் மற்றொரு புனிதரின் திருப்பண்டத்தை சுமந்து வருகிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம் மிக எளிய வாழ்வின் மூலம் புனித வாழ்வு வாழ்ந்தவர்.

இன்றைய நற்செய்தியும் பரிசேயருக்கும், வரி தண்டுபவருக்கும் உள்ள மனநிலையை விளக்குகிறது. பரிசேயர் தன்னையே மையப்படுத்தி, தன்னையே உயர்த்தி கூறினார். ஆனால் வரிதண்டுபவர் தன் பாவநிலையை உணர்ந்து, வருந்தி கடவுளை மையப்படுத்தி ஜெபித்தார்.

நாமும் பல வேளைகளில் பொறுப்புகளில் இருக்கும்போது நாம் சாதாரண மனிதர்கள் என்ற எண்ணத்தையும், பொறுப்புகளும், பதவிகளும் பணிவிடை புரிவதற்கு என்ற நிலையினையும் மறைந்து, ஏதோ நாம் முதலாளிகள் என்ற எண்ணத்தோடு உடன் பணி செய்பவர்களை தரக்குறைவாகவும், மரியாதையின்றியும் நடத்துவதை காண முடிகிறது. கடவுள் நொறுங்கிய இதயத்துக்கு ஆதரவளிக்கிறார். செருக்குள்ள இதயத்தை கண்டத்து திருத்துகிறார்.

**முதல் வாசகம்**
சீராக் 35:12-14,16-18

**இரண்டாம் வாசகம்**
2 திமொ 4:6-8,16-18

**நற்செய்தி**
லூக்கா 18:9-14

லசாலிய முத்திப்பேறு பட்டம் பெற்ற புனித அர்னால்டு

அக்டோபர் 2022

# 23

ஞாயிற்றுக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



### தெலசாலின் பொன்மொழி

அருளாளர். அர்னால்டு, FSC புனித பவுலடியார் உரைப்பதுபோல, கடவுள் தனது விளைநிலத்தில் உங்களை பணிசெய்ய அழைத்துள்ளார். மாணவர்களுக்கு நற்செய்தியைப்பற்றி அறிவிப்பது உங்களின் பணி. (MSF)



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 4:32, 5:8

பதிலுரைப்பாடல்
திபா. 1:1-4,6

நற்செய்தி
லூக்கா 13:10-17

அந்தோணி
மரிய கிளாரட்

அக்டோபர் 2022

**24**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

கடவுள் மன்னிப்பில் வல்லவராய் தோன்றினார். இன்றைய இரு வாசகங்களின் மூலம் கடவுள் நம்மையும் பிறரையும் மன்னிக்க அழைப்பு விடுக்கிறார். மேலும் இன்றைய நற்செய்தியில் இயேசு தீய ஆவி பிடித்தவரின் பாவங்களை மன்னித்து அவருடைய உடல் நோயை நீக்குகிறார். கடவுள் அவருடைய மகன் இயேசு கிறிஸ்து வழியாக நம்முடைய பாவங்களை மன்னித்தது போல நாமும் ஒருவர் மற்றவரை மன்னித்து வாழ இன்றைய நாளில் முயற்சி செய்வோம்.

இன்றையப் புனிதர்கள் புனித லூயிஸ் குவனெல்லா மற்றும் புனித அந்தோணி மேரி கிளாரட் இருவருமே பாவ மன்னிப்பு வழங்குவதில் வல்லமை பெற்றவர்களாய் திகழ்ந்தனர். அவர்கள் கடவுளால் திருப்பொழிவு செய்யப்பட்டு பாவமன்னிப்பு வழங்கும் வரத்தினை பெற்றிருந்ததால் அதிகமான மக்களுக்கு பாவ மன்னிப்பினை வழங்கினார்கள்.

நம் புனிதர் தெலசாலும் பல வழியில் பகைவர்களால் சோதிக்கப்பட்ட போதிலும் அவர்களை கடிந்துக் கொள்ளாமல் மன்னித்து அவர்களுக்காக இறைவனிடம் ஜெபம் செய்தார். எனவே நாமும் புனித தெலசாலைப் போன்று பாவம் செய்பவர்களுக்கு எதிராக செயல்படாமல் அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்து அவ்ாகளை நல்வழிப்படுத்த இன்றைய நாளில் முயற்சி செய்வோம்.

**ஜெபம் :**

கருணையின் இறைவா! எங்களுக்கு எதிராக பாவம் செய்பவர்களுக்கு நாங்கள் எந்த தீங்கும் இழைக்காமல் மாறாக அவ்ாகள் செய்த பாவங்களை அவர்களுக்கு உணர்த்தி அவர்களை மன்னித்து வாழும் மனப்பான்மையை எங்களுக்கு அருள வேண்டுமென்று ஜெபிக்கிறோம். - ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் வாழ்வில் எத்தகைய சூழலிலும், எங்கு வேண்டுமானாலும் நீங்கள் பிரச்சனைகளை சந்திக்க வேண்டிருக்கும். [கடிதம் - 58]

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS -INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
எபேசியர் 5:21-33

பதிலுரைப்பாடல்
தி.பா. 128:1-5

நற்செய்தி
லூக்கா 13:18-21

புனிதர்கள்
கிறிஸ்பின் மற்றும்
கிறிஸ்பினியன்

அக்டோபர் 2022

**25**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும். இன்றைய முதல் வாசகத்தில் புனித பவுல் திருமண வாழ்க்கையைப் பற்றி மிக அருமையாக கூறியுள்ளார். கணவன், மனைவி ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, அன்பு செய்து பரஸ்பரமாக வாழவேண்டுமென்றும் வலியுறுத்துகிறார். இவ்வாறு வாழும்போது இருவருக்குமிடையே புரிதல் ஏற்பட்டு அன்பு வளரத் தொடங்குகிறது. ஆகவே நாமும் இறைவன் தந்த இவ்வாழ்வில் அன்பின் மகிமையை உணர்ந்து நாம் நம்மை மட்டுமே அன்பு செய்யாமல் பிறரையும் அன்பு செய்து வாழ இந்நாளில் இறைவனின் அருள் வேண்டுவோம்.

இன்றையப் புனிதர்கள் இரட்டையர்களான புனித கிறிஸ்பின் மற்றும் புனித கிறிஸ்பியான் இவர்கள் இருவரும் புனித பவுலின் மீது அளவுகடந்த அன்பு கொண்டவர்களாய் இருந்தனர். புனித பவுலைப்போல பல இடங்களுக்கு சென்று நற்செய்தியைப் போதித்தனர். சென்ற இடங்களில் எல்லாம் இருந்த மக்களை அன்பு செய்து அவர்கள் ஈட்டிய வருமானத்தில் அம்மாக்களுக்கு உதவி செய்தனர். கிறிஸ்துவை மறுதலித்து பேச விரும்பாததால் பேரரசர் டயோக்கிளிசியனால் சித்திரவதை செய்யப்பட்டு, தலை வெட்டப்பட்டு கொல்லப்பட்டனர்.

நம்முடைய புனிதர் தெலசால் மாணவர்கள் மீது அளவுகடந்த அன்பு செலுத்தி அவர்களை நல்வழிபடுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார். மாணவர்களை மட்டுமில்லாமல் அவருடன் இருந்த சகோதரர்களையும் நன்முறையில் நடத்துவதில் முழுமனதுடன் செயல்பட்டார். எப்பொழுதெல்லாம் அவர்கள் சகோதர வாழ்விலிருந்து வெளியே வரும் போது புனித தெலசால் அவர்களை ஒன்றுகூட்டி தியானம் நடத்தி அவர்ககளுக்கிடையில் அன்பு மலரச் செய்தார் ஆகவே நாமும் அன்பை மற்றவர்களின் மனதில் விதைக்க இந்நாளில் முயற்சி செய்வோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்கள் வாழ்வில் எத்தகைய சூழலிலும், எங்கு வேண்டுமானாலும் நீங்கள் பிரச்சனைகளை சந்திக்க வேண்டிருக்கும்.
(கடிதம் - 36)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
எபேசியர் 6:1-9

பதிலுரைப்பாடல்
திபா. 145:10-14

நற்செய்தி
லூக்கா 13:22-30

புனித
எவரிடஸ்

அக்டோபர் 2022

**26**

செவ்வாய்க்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்


இயேசு கிறிஸ்து கீழ்படிதலுக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர். இன்றைய இரண்டு வாசகங்களும் கீழ்படிதல் என்றால் என்ன என்பதை நமக்கு உணர்த்துகிறது. கீழ்படிதல் என்ற நற்பண்பை உடையவர்கள் பாவத்திற்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகியிருக்கவே நினைப்பார்கள், ஏனெனில் கடவுள் அவர்கள் மேல் குடிகொள்கிறார். ஆகவே நாமும் நம்முடைய வாழ்வில் கீழ்படிதல் என்ற நற்பண்பை வளர்த்துக்கொண்டு இறைவன் பாதம் நடப்போம்.

இன்றையப் புனிதர் எவரிஸ்டஸ் எளிமையான வாழ்வு வாழ்ந்தவர். எந்த ஒரு ஆடம்பரத்தையும் விரும்பாமல் புனித வாழ்வை மேற்கொண்டவர், அவரது விடாமுயற்சியின் விளைவாக பல புதுப்புது திட்டங்கள் திருச்சபையில் கொண்டுவரப்பட்டன. மேலும் இவர் கீழ்படிதல் என்னும் பண்பை நாள்தோறும் கடைப்பிடித்தார். நாமும் இவருடைய மேன்மையை உணர்ந்து வாழ முயற்சிப்போம்.

நம் சபையின் நிறுவனர் புனித தெலசாலும் கீழ்படிதல் என்னும் வார்த்தைப்பாட்டை மிக ஆழமாகவும், கண்டிப்புடனும் பின்பற்றினார். எந்த துன்பம் வந்தபோதும் அவர் கடவுளுக்கு கீழ்படிந்தவராய் அந்த துன்பங்களையெல்லாம் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டார். இவ்வாறு கீழ்படிதலை ஒரு வரமாக ஏற்று புனித வாழ்வை மேற்கொண்டவர் நம் புனிதர் தெலசால் என்பதை நினைவு கூர்வோம்.

**ஜெபம் :**

இரக்கத்தின் இறைவா! இன்றைய வாசகங்களின் கருத்திற்கு ஏற்ப நாங்களும் கீழ்படிதல் என்னும் தூயப் பண்பை எங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்து, புனித வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ எங்களுக்கு தேவையான வல்லமையையும், ஞானத்தையும் அருள வேண்டுகிறோம். - ஆமென்.



**தெலசாலின் பொன்மொழி**

எவ்வளவு உண்மையாக நீங்கள் செபிக்கிறீர்களோ, அவ்வளவு வெற்றிகளை உங்கள் பணியில் செய்வீர்கள் என்பதில் உறுதியாயிருங்கள். (MSF)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

**முதல் வாசகம்**
எபேசியர் 6:10-20

**பதிலுரைப்பாடல்**
திபா. 144:1,2,9-10

**நற்செய்தி**
லூக்கா 13:31-35

**புனித ஃபுருமெண்டியுஸ்**

**அக்டோபர் 2022**

**27**

**வியாழக்கிழமை**

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்பிக்கையை அடையாளமாய்க் கொண்டிருந்தார். இன்றைய இரண்டு வாசகங்களும் நமக்கு நம்பிக்கையின் மகத்துவத்தை விவரிக்கின்றன. குறிப்பாக இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தான் கொலை செய்யப்படப்போகிறார் என்பதை தெரிந்திருந்தும் நம்பிக்கையோடு அந்த சூழலை எதிர்கொள்கிறார். நம்பிக்கை இருக்கும் இடத்தில் துணிவு இருக்கும். எனவே நாமும் இயேசுவின் வழியைப் பின்பற்றி நம்பிக்கையோடு வாழ இன்றைய நாளில் முயற்சிப்போம்.

இன்றைய புனிதர் எத்தியோப்பிய நாட்டின் பாதுகாவலர் புனித புரூமென்தியுஸ் விவிலியத்தின் மீது ஆழ்ந்த பற்றுடையவர். கிறிஸ்துவ சமயத்தை எத்தியோப்பிய நாட்டிற்குள் கொண்டு வந்ததில் முக்கிய பங்கு வகித்தவர், கடவுளின் மீது மிகுந்த நம்பிக்கையுடையவர். இவரைப்போல் நாமும் நம்முடைய வாழ்வில் நம்பிக்கையுடன் வாழ இறைவனின் அருள் வேண்டுவோம்.

நம்பிக்கையை மணிமுடியாக கொண்டவர் நம் புனிதர் தெலசால். நம்பிக்கை வாழ்வுக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் அவர் இறக்கும் கடைசி தருவாயில் கூட அவர் இறைவன் மீது வைத்திருந்த அளவுகடந்த நம்பிக்கையை கைவிடவில்லை. நாமும் நம்முடைய வாழ்வில் நம்பிக்கையை வேரூன்றச் செய்து கடவுளின் பிள்ளைகளாக வாழ முற்படுவோம்.

**ஜெபம் :**

நம்பிக்கையின் நாயகனே இறைவா! இன்றைய வாசகங்களுக்கு ஏற்ப நம்பிக்கையை எங்களுடைய மனதில் உயர்ந்தோங்கச் செய்யவும், நாங்கள் செய்யும் செயல்களில் முழு மன நம்பிக்கையுடன் செயல்பட எங்களுக்கு வேண்டிய ஆற்றலை தந்தருள தேவையான அருளை வேண்டி ஜெபிக்கிறோம்.

**தெலசாலின் பொன்மொழி**

கடவுள் உங்களுக்கு நிறைவான அருளை வழங்கியுள்ளார். தினமும் உங்களுக்கு அவர் தனது அருளை வழங்குவார். MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
எபேசியர் 2:19-22

பதிலுரைப்பாடல்
திபா. 19:1,2,3,4

நற்செய்தி
லூக் 6:12-19

புனித சீமோன் மற்றும் யூதா

அக்டோபர் 2022

**28**

வெள்ளிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரிவேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

இயேசு கிறிஸ்து ஒற்றுமை என்பதற்கு ஒரு உதாரணமாய்த் திகழ்ந்தவர் ஆம், இன்றைய வாசகங்களிலும் கடவுள் நமக்கு ஒற்றுமையுடன் வாழ அழைப்பு விடுக்கிறார். இன்றைய முதல் வாசகத்தில் புனித பவுல் பின்வருமாறு கூறுகிறார் "மக்களாகிய நாம் அனைவரும் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்" என்று நாமும் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்து இச்சமூகத்தில் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ இன்றைய நாளில் இறைவனின் அருள்வேண்டுவோம்.

இன்றைய புனிதர்கள் புனித சீமோன் பேதுரு மற்றும் புனித யூதா ததேயு இவர்கள் இருவரும் கடவுளின் திருத்தூதர்களாகவும் இறைவாக்குரைப்பவர்களாகவும் திகழ்ந்தவர்கள். ஒருமுறை பெர்சியாவில் இருவரும் சந்தித்தபோது இருவருக்கும் இடையே நட்பு வளர்த்தது. அதே நாட்டிலேயே இருவரும் மறைசாட்சிகளாக உயிர் துறந்தனர். நாமும் நம்முடைய வாழ்வில் ஒருவர் மற்றவரோடு நட்புடன் வாழ இப்புனிதர்கள் வழியாக இறைவனிடம் அருள் வேண்டுவோம்.

எவ்வித துன்பங்கள் மற்றும் பிரச்சனைகள் சகோதரர்கள் இடையில் வரும்போது புனித தெலசால் தியானங்கள் ஏற்பாடு செய்து அன்பின் வழியாக ஒற்றுமையையும் அனைத்து சகோதரர்களும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்று கற்பித்து இன்னல்களை அகற்றினார். இவ்வாறு நாமும் நம்முடைய வாழ்வில் ஒற்றுமையில் ஒன்றித்திருக்க கடவுளின் அருள் வேண்டுவோம்.

### தெலசாலின் பொன்மொழி

சீமோன், ஜூடு, திருதூதர்கள் :
நீங்களும் திருதூதர்களை போன்றே சிறப்பான பணியை செய்ய அழைக்கப்பட்டுள்ளீர்கள். அதற்கான சிறந்த ஆர்வம் உங்களுக்குத் தேவை. (MSF)



COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை





முதல் வாசகம்
பிலிப்பியர் 1:18-26

பதிலுரைப்பாடல்
திபா. 42:1,2,4

நற்செய்தி
லூக்கா 14:1,7-11

புனித நர்சிசுஸ்

அக்டோபர் 2022

**29**

சனிக்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

இயேசு கிறிஸ்து கடவுளால் அனுப்பப்பட்டவர் எனினும், அவர் தன்னைத்தானே தாழ்த்திக்கொண்டு எளிமையான வாழ்வு வாழ்ந்தவர். இன்றைய வசனங்களும் நமக்கு தாழ்ச்சியைப் பற்றி தான் கூறுகிறது. நாம் வாழும் இந்த வாழ்க்கையில் தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டு வாழும் போது விண்ணகத்தில் கடவுள் நம்மை தலைத்தூக்கி நிற்கச் செய்கிறார். ஆகவே நாம் தாழ்ச்சி என்னும் மனப்பான்மையை நம்முடைய வாழ்வில் வளர்த்துக்கொண்டு எளிமையாக வாழ இயேசு வழி நடப்போம்.

இன்றையப் புனிதர் புனித நரசிசூஸ் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தவர், எப்பொழுதெல்லாம் இவர்மீது, குற்றச்சாட்டுகள் எழுகிறதோ அதையெல்லாம் அவர் மறுதலிக்காமல் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டார். மேலும் இவர் ஜெபவாழ்வின் மூலம் தாழ்ச்சியைக் கடைபிடித்தார். நல்லொழுக்கங்களில் சிறந்து விளங்கினார். நாமும் இன்றைய நாளில் தாழ்ச்சியைக் கடைபிடித்து வாழ முயற்சிப்போம்.

புனித தெலசால் தாழ்ச்சி எனும் மனப்பாங்கை மிக கன்னியமாக பின்பற்றினார். இவர் மட்டுமின்றி இவருடன் இருந்த அனைத்து சகோதரர்களின் மனதிலும் தாழ்ச்சியைப் புகுத்தினார். இவருடைய எளிமையான வாழ்வின் காரணமாக, பல வெற்றிகளைப் பெற்றார். நாமும் இறைவனின் சித்தத்தில் வாழ புனித தெலசால் வழியாக கடவுளிடம் அருளினை வேண்டுவோம்.

**ஜெபம் :**

அன்பின் இறைவா, நீர் படைத்த கைவினைப் பொருளாகிய நாங்கள் இவ்வுலகத்தில் தாழ்ச்சியைக் கடைப்பிடித்து, உம்மைப் போல் எளிமையான வாழ்வு வாழ்ந்து, பிறருக்கு உதவி செய்து வாழும் நல்ல மனப்பான்மையை எங்களுக்கு தந்தருள தேவையான வரம் வேண்டி உம்மிடம் ஜெபிக்கிறோம் எங்கள் நல்ல தந்தையே – ஆமென்.



### தெலசாலின் பொன்மொழி

என் அன்பு சகோதரரே, உங்கள் சிறந்த முயற்சியை செபத்தில் ஈடுபடுத்துங்கள். அதுதான் பிறருக்கு அருளை பெற்று தாரும். (கடிதம் – 44)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



## சிந்தனைத் துளிகள்

முதல் வாசகம்
சா.ஞா 11:22-12:2

இரண்டாம் வாசகம்
2 தெச 1:11 - 2:2

நற்செய்தி
லூக்கா 19:1-10

பொதுக்காலம் 31-ம் ஞாயிறு

அக்டோபர் 2022

**30**

ஞாயிற்றுக்கிழமை

இயேசு கிறிஸ்து பாவிகளை கண்டித்துத் தண்டனை அளிப்பவராக இல்லாமல் மாறாக அவர்களின் பாவங்களை மன்னித்து திருத்துகிறார். ஆம் இதே போல இன்றைய வாசகங்கள் குறிப்பாக இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு கிறிஸ்து பாவியான வரிதண்டுவோரான சக்கேயுவை அவரது அன்பால் திருத்தி மனம் மாறச் செய்கின்றார். கடவுளை நாம் செய்யும் பாவங்களுக்கு தண்டனை அளிக்காமல் அப்பாவங்களை மன்னிக்கிறார். நாமும் பிறர் செய்யும் தவறுகளை அவர்களுக்கு உணர்த்தி, பிறரை மன்னித்து வாழ முயற்சிப்போம்.

இன்றைய புனிதர் புனித ஜெரார்டு மஜெல்லா உன்னதமான வாழ்வு வாழ்ந்தவர். இவர் பல்வேறு துன்பங்களினால் பாதிக்கப்பட்ட போதிலும் இவர் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையைக் கைவிடவில்லை. கீழ்படிதல், தாழ்ச்சி, எளிமை ஆகிய பண்பு நலன்களில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளவில்லை. நற்கருணையில் கிறிஸ்து பிரசன்னமாயிருக்கிறார் என்று கூறினார். இவ்வாறாக இயேசுவின்மீது ஆழ்ந்த பற்றுடையவராக திகழ்ந்தார். இவரைப்போல் நாமும் சிறந்த முறையில் வாழ முற்படுவோம்.

நம்முடைய புனிதர் தெலசாலும் இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுவதுபோல இவரும் மக்களின் மனமாற்றத்தில் முக்கிய பங்கு வகித்தார். இவருடைய புனித வாழ்வு ஏராளமான மக்களின் மனமாற்றத்திற்கு பேருதவியாக இருந்தது. மாணவர்கள் தவறான வழிகளில் செல்லும் போது அவர்களை ஒன்று சேர்த்து அவர்களிடம் கலந்துரையாடி அவர்களின் மனம் மாற்றத்திற்கு அவர் உதவினார்.



### தெலசாலின் பொன்மொழி

திருதூதர்களின் பணியை உங்களுடன் பகிர்ந்து கொண்ட கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். (MSF)

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC



# இறைவார்த்தையோடு லசாலியச் சிந்தனை



முதல் வாசகம்
சா.ஞா 11:22-12:2

இரண்டாம் வாசகம்
2 தெச 1:11 - 2:2

நற்செய்தி
லூக்கா 19:1-10

பொதுக்காலம்
31-ம்
ஞாயிறு

அக்டோபர் 2022

**31**

திங்கள்கிழமை

சிந்தனை
அருட்சகோ. **பிரினேஷ்** FSC

## சிந்தனைத் துளிகள்

இன்றைய வாசகங்கள் இரண்டும் நம்மை ஒருவர் மற்றவரோடு அக்கறை கொண்டு வாழ அழைக்கிறது. நாம் மற்றவர்களிடம் எந்த ஒரு கைம்மாறையும் எதிர்பார்க்காமல் நம்முடைய அக்கறையை அவர்கள் மேல் செலுத்த வேண்டும். பொருளையோ செல்வத்தையோ எதிர்பார்த்து அக்கறை செலுத்தும்பொழுது நாம் பாவத்திற்கு உள்ளாகிறோம் என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறுகிறார். எனவே நாம் எதையும் எதிர்பார்த்து அக்கறை செலுத்தாமல் மாறாக உண்மையான அன்பின் வழியாக ஒருவர் மற்றவரோடு அக்கறை செலுத்தி வாழ இந்நாளில் இறைவனின் ஆசீர் வேண்டுவோம்.

இன்றையப் புனிதர் அல்போன்ஸ் ரொட்ரிகஸ் மிக கண்டிப்பான எளிமையான வாழ்வினை கடைப்பிடித்தார். ஒரு காலக்கட்டத்தில் திருமணம் ஆகிய குடும்பத்தோடு இருந்த அவர் பின்பு அவரது குடும்பத்தை இழந்து தனிமரமானார். இருப்பினும் இயேசுவின்மீது கொண்ட தாக்கத்தால் பல தடைகளை தாண்டி ஒரு துணைச் சகோதரராக மாறினார். சில மாதங்கள் கழித்து ஒரு கல்லூரிக்கு வாயிற்காப்பாளர் பணிக்காக அனுப்பப்பட்டார். மேலும் பல கல்லூரி மாணவர்களுக்கு அவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டுதல்கள் அளித்து அவர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவி செய்தார்.

நம்முடையப் புனிதர் தெலசால் மாணவர்கள் மீது கொண்ட அளவு கடந்த அக்கறையினால் எப்பொழுதெல்லாம் மாணவர்கள் நெறிதவறி செல்கிறார்களோ அப்போதெல்லாம் அவர்களை அழைத்து, அவர்களின் தவறுகளை உணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்துவதில் முக்கிய பங்கு ஆற்றினார். நாமும் இன்றைய நாளில் மற்றவர்கள் மீது அன்பும், அக்கறையும் கொண்டு வாழ முயற்சி செய்வோம்.



**தெலசாலின் பொன்மொழி**

என் அன்பு சகோதரரே, உங்களுக்கு நான் செபிக்க தவறியதில்லை (கடிதம் - 37)

COMMUNICATION COMMISSION
DE LA SALLE BROTHERS - INDIA

## புனிதராக வாழ உடல் ஊனம் தடையல்ல
## இம்மாத லசாலிய புனிதர் ஹெய்மே ஹில்லாரியோ

புனித ஹெய்மே ஹில்லாரியோ 1898ம் வருடம் ஜனவரி மாதம் 2-ம் நாள் ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனாவில் பிறந்தவர் இவருக்கு சிறுவயதிலே குருவாக வேண்டுமென்ற ஆசை இருந்ததால் குருமடத்தில் சேர்ந்தார். இவருக்கு கேட்டல் திறனில் குறைபாடு இருந்ததால் குருமடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இவர் தன்னுடைய 19-ம் வயதில் தெலசால் சபை அருட்சகோதரர்கள் செய்த பணியினால் ஈர்க்கப்பட்டு சபையில் சேர்ந்தார். பல வருடங்கள் கல்விப்பணியிலும், ஆன்மீகப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். எட்டு வருடங்கள் நவதுறவியர் மடத்திலும் பணி செய்தார். இவருடைய கேட்டல் திறன் இன்னும் அதிகமாக குறைந்ததினால் அவரால் கல்விப்பணியை தொடர முடியவில்லை. அதனால் பார்சிலோனாவில் உள்ள அருட்சகோதரர்களுடைய பயிற்சி இல்லத்தில் உள்ள தோட்டங்களை கவனித்து வந்தார்.

1936ம் ஆண்ட ஸ்பெயின் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தின் போது கிறிஸ்தவர்களும், துறவிகளும் துன்புறுத்தப்பட்டபொழுது இவர் ஒரு அருட்சகோதரர் என்பதனால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அருட்சகோதரர். ஹெய்மே, ஜனவரி 13-ம் தேதி 1937ம் ஆண்டு விசாரணைக்காக மக்கள் தீர்ப்பாயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இவருடைய வழக்கறிஞர் இவரிடம், நீங்கள் ஒரு கத்தோலிக்க அருட்சகோதரர் என்பதை வெளிப்படுத்தாமல், நான் ஒரு தோட்டக்காரன் என்று சொன்னால் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று ஆலோசனை வழங்கினார். ஆனால் அருட்சகோதரர். ஹெய்மே தான் ஒரு க த்தோலிக்க அருட்சகோதரர் என்பதனை பகிரங்கமாக அறிவித்தார். இதுவே அவருடைய படுகொலைக்கு தீர்ப்பானது.

இவர் தன்னுடைய குடும்பத்தினருக்கு எழுதிய இறுதி கடிதத்தில் "நான் ஒரு கிறிஸ்தவத் துறவி, கிறிஸ்தவக் குழந்தைகளின் கல்விக்காக உழைத்தேன் என்ற ஒரே காரணத்திற்காக நான் சுடப்பட்டு கொல்ப்பட வேண்டும் என்று தீர்ப்படப்பட்டுள்ளேன். இதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன். உங்களுக்காக நான் விண்ணகத்தில் காத்து கொண்டிருப்பேன்." என்று எழுதி இருந்தார். அருட்சகோதரர். ஹெய்மே, ஜனவரி 18-ம் தேதி 1937 ம் ஆண்டு தன்னுடைய 39ம் வயதில் கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்தவ வாழ்வுக்காகவும் சுட்டு கொல்லப்பட்டார்.

அவர் தன்னுடைய நாள் குறிப்பேட்டில், "நான் கிறிஸ்துவுக்காக இவ்வளவு கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று முன்பே தெரிந்திருந்தால், நான் கண்டிப்பாக இந்த வாழ்க்கைக்கு அழைத்தல் வாழ்வுக்கு ஆசைப்பட்டிருக்க மாட்னே ஆனால் இப்பொழுது இந்த உலகில் உள்ள அனைத்து பொன்னையும், செல்வங்களையும் கொடுத்தாலும், நான் என்னுடைய துறவற அடையாளத்தையும், ஆடையையும் இழக்க தயாராக இல்லை" என்று எழுதி இருந்தார்.

நாமும் நம்முடைய துறவற வாழ்வில் புனித ஹெய்மே ஹில்லரியைப் போன்று இறை அனுபவத்தில் ஆழமும், அழைத்தலில் நாட்டமும், பணி வாழ்வில் ஈடுபாடும் கொண்டு வாழத்தேவையான அருள்வேண்டி புனித ஹெய்மே ஹில்லரி வழியாக ஜெபிப்போம்.

## லசாலிய இறை அழைத்தல் கல்வி பணிக்கு அர்ப்பணிக்க தயாரா?



**வாருங்கள், லசாலிய குடும்பத்தோடு வாழ்வதற்கு**



## இம்மாத லசாலிய புனிதர்

## ஹெய்மே ஹில்லாரியோ (1898 – 1937)

**திருவிழா : அக்டோபர் 9**

### ஜெபம்

அருள் நிறை இறைவா,
நீயே நற்தகப்பானகவும், வழிகாட்டியாகவும்
ஆதரவாகவும், பேரானந்தமாகவும்
வலுவாகவும், ஒளியாகவும் நாள்தோறும்
இருப்பதாக எம் அருட்சகோதரர்
புனித ஹய்மே ஹீல்லாரியோ உமக்குச் சான்று பகர்ந்தார்.
அவரும் அவருடன் இணைந்து டூரோன் நகரத்து
மறைசாட்சிகளான எம் அருட்சகோதரர்கள்
நற்செய்தியின் வல்லமைக்கு முன்னுதாரணம்
கொண்டனர்.

அந்நற்செய்தியின் வல்லமைனிால்
நாங்களும் தூண்டி எழவும், அதனை
பெருமையாக ஏற்று வாழவும் உமது
ஆவியினை எம் மீது பொழிந்தருளும்
எங்களது சிலுவையினை நாங்கள்
தைரியமுடன் தழுவவும் உமது
அன்பிற்கு நற்சான்றாக விளங்கவும்
எமக்கு அருள்தாரும் ஆமனென்.


வெளியீடு
தகவல் தொடர்பு குழு
தெலசால் சபை, இந்திய மறைப்பணித்தளம்.
இளைஞர் நகர் புல்லூத்து, நாகமலை, மதுரை – 625019

அடுத்த இதழில் நவம்பர் மாதச் சிந்தனையைத் தொகுத்து வழங்குபவர் : அருட்சகோ. பிரிக்ஸ்டன் FSC,